HGH INDIA 2016 SM

Homedécor ▪▪▪ Gifts ▪▪▪ Houseware

JULY 1-3, 2016 MUMBAI, INDIA

# NEWS 1

A TEXZONE Event

**Where business feels at home!**

ஐந்தாம் பதிப்பு

# அதிக விற்பனையாளர்கள், புத்தம் புதிய வாய்ப்புகள்

## 100 புது விற்பனையாளர்கள், 30 நாடுகளிலிருந்து பெரிய இந்திய பிராண்டுகளின் புதிய படைப்புகள்



ஆரம்பித்து 5 வருடங்களே முடிந்திருக்கும் நிலையில், HGH இந்தியா ஒரு நம்பகமான வணிக கண்காட்சி அமைப்பாக உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்தியா மற்றும் இதர பிர நாடுகளிலிருந்து ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஹோம் டெகோர், ஹவுஸ்வேர்ஸ் மற்றும் கிஃப்ட்ஸ்களுக்கு வர்த்தக கண்காட்சி அமைத்துக் கொடுப்பதில் HGH இந்தியா ஒப்பற்று விளங்குகிறது. இந்தியா மற்றும் சர்வதேச விற்பனையாளர்களிடமிருந்தும் புதிய வருகையாளர்களிடமிருந்தும் வந்து குவிந்து கொண்டிருக்கும் தகவல் சேகரிக்கும் கோரிக்கைகள் எண்ணிக்கை, சென்ற ஆண்டை விட இரண்டு மடங்கு அதிகரித்திருப்பது, வர்த்தகம், பிராண்டுகள், பற்பல துறைகள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு இக் கண்காட்சி வழங்கிக் கொண்டிருக்கும் அளவிலா பயன்களுக்கு ஒரு சான்றாக கட்டியம் கூறுகிறது.

HGH இந்தியா 2016, 5ம் பதிப்பு வர்த்தக கண்காட்சி வரும் ஜூலை மாதம் 1-3 தேதிகளில் பாம்பே எக்ஸிபிஷன் சென்டர், மும்பையில் நடக்கவிருக்கிறது. கண்காட்சி நடக்க இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கும்போதே, இதுவரை நடந்திருக்கும் கண்காட்சிகளை விட இந்த முறை HGH இந்தியா 2016 மிகப் பெரியதாக இருக்கும் வகையில் 450 உற்பத்தியாளர்களும் பிராண்டுகளும் சுமார் 30 நாடுகளிலிருந்து தங்கள் பொருள்களை காட்சிக்கு வைக்க இருக்கிறார்கள். பல புதிய உற்பத்தியாளர்கள் ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம், யூகே, யூஎஸ்ஏ, ஆஸ்திரேலியா, டர்கி, சீனா, ஹாங்காங், ஜப்பான், கொரியா, தய்வான், மலேசியா, வியட்நாம், பங்க்ளாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து பற்பல புதிய புராடெக்டுகள் புது முறைகளை உள்ளடக்கிய நவீன வாழ்முறை வசதிகளுடன் இந்திய நுகர்வோர்களுக்காக முதன் முறையாக சந்தையில் அறிமுகமாக உள்ளன.

வழக்கமான வாடிக்கையளர்களில் 80 சத விகிதத்திற்கும் அதிக எண்ணிக்கையினர் இந்த வருட HGH இந்தியா 2016 கண்காட்சியில் தங்கள் புதிய படைப்புகளையும் பொருள்களையும் காட்சிக்கு வைக்க இருக்கிறார்கள். பல புதிய இந்திய மற்றும் சர்வதேச புராடெக்ட் வகைகள் முதன்முறையாக காட்சிக்கு வைக்கப்பட இருப்பதால் அவற்றின் வருகை ரீடெய்லர்கள், டிஸ்டிரிபூட்டர்கள் மற்றும் நிறுவன கொள்முதலாளர்களுக்கு புதிய உற்சாசகம் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்திய ரீடெய்லர்கள், இறகுமதியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், வினியோகஸ்தர்கள், ஆர்கிடெக்டுகள் மற்றும் 425 எண்ணிக்கையைவிட அதிக நகரங்களிலிருந்து தொழில்முறை கண்காட்சி வருகையாளர்கள் என்று பலரும் இந்த கண்காட்சிக்கு வருகை புரிய இருக்கிறார்கள். இப்பொழுது காணப்படும் ஆர்வதைக் கணக்கிடும் போது சென்ற ஆண்டுகளை விட இந்த வருட கண்காட்சிக்கு வரவிருக்கும் வருகையாளர்கள் எண்ணிக்கை 25% சதவிகிதம் அல்லது 22,750 ஐக் கடந்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

குறிப்பாக, மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் இந்திய ஹோம் ஃபேஷன் சந்தை, 30க்கும் அதிக சர்வதேச உற்பத்தியாளர்களிக்கு இந்தியாவின் பிசினெஸ் பார்ட்னர்களுடன் ஓர் ஆரோக்கியமான வர்த்தக உறவை உருவாக்கிக் கொடுக்கும் சுமுகமான வர்த்தக சூழ்நிலையை இக் கண்காட்சி அமைத்துக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்திய மற்றும் சர்வதேச உற்பத்தியாளர்கள், பிராண்டுகள், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வினியோகஸ்தர்களை குறிப்பாக இந்திய டிபார்ட்மென்டல் ஸ்டோர்கள், ஹைப்பர் மார்கெட்டுகள், இ-ரீடெய்லர்கள் முக்கியமாக ரீடெய்லர்கள், ஃபிராஞ்சைசிகள், பொட்டிக்குகள், இறக்குமதியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் நிறுவன கொள்முதலாளர்களுடன் தொடர்புகொள்ளச் செய்து வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது HGH இந்திய கண்காட்சியின் முக்கிய நோக்கமாக இருக்கும்.

2016/17 ஆண்டில் உருவாகவிருக்கும் ஃபேஷன் டிரெண்ட் மற்றும் சந்தைப் போக்கை கண்காட்சி வருகையாளர்கள் அடையாளம் காண உதவும் ஏற்பாடுகளையும் HGH இந்தியா 2016 மேற்கொள்ளவிருக்கிறது. வரும் ரீடெய்ல் ஆண்டில் சந்தைப் போக்கை அனுசரித்து விற்பனையை அதிகரிக்கும் குறிக்கோள் கொண்டிருக்கும் அனைத்து வருகையாளர்களும் COGNIZANCE தீம் ஜோன் எனப்படும் டிரெண்ட்ஸ் பெவிலியனைக் கட்டாயம் காணவேண்டும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் புதிய கண்டுபிடிப்புகளையும் புதுப் பொருள்கள் சேகரங்களையும் ஒன்றாக அடுத்தடுத்து தங்கள் இந்திய பழைய மற்றும் புதிய வாடிக்கையாளர்கள் காட்சிக்கு வைக்கும் வசதியை இந்த வணிக கண்காட்சி செய்துகொடுக்கும்.

HGH இந்தியா, 2012 வருடத்தில் ஆரம்பித்த முதல் பதிப்பைத் தொடர்ந்து அடுத்தடுத்த வருடாந்திர கண்காட்சிகளில் 90 சத விகிதத்திற்கும் அதிக எக்ஸிபிட்டர்களையும் விசிட்டர்களையும் கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறது. அதனால், விற்பனையாளர்களுக்கும், கொள்முதலாளர்களுக்கும் இது ஓர் அற்புதமான தளமாக அமைந்து பலமடைந்து கொண்டிருக்கிறது.

தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு அடுத்தடுத்து வர்த்தகக் கண்காட்சிகளை அரங்கேற்றிருக்கும் HGH இந்தியா, உலகத்தரம் வாய்ந்ததாக, தொழில்முறை திறமையுடன், பங்கேற்பவர்கள் அனைவருக்கும் பலனளிக்கும் விதமாக வர்த்தகக் கண்காட்சிகளை நடத்துவதில் திறமை பெற்றுள்ளது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கொள்முதல் சீசன் ஆரம்பமாகும் மிகப் பொருத்தமான காலநிலைமையில் கண்காட்சியை ஏற்பாடு செய்திருக்கும் HGH இந்தியா, தொடர்ந்த வளர்ச்சி மற்றும் உயர் தரத்தைப் பராமரித்து எக்ஸிபிட்டர்களுக்கும் விசிட்டர்களுக்கும் மிகவும் பயனுள்ள உதவியை அளித்துக் கொண்டிருக்கிறது.




**புது கண்டுபிடிப்புகள் ■ டிரெண்டுகள் ■ புராடெக்டுகள் ■ வளங்கள் ■ வாய்ப்புகள்**

# HGH இந்தியா 2016: 450 பிராண்டுகள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யும் வசதி

## இந்திய சந்தை

வாழ்க்கையில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் இளைய தலைமுறை மற்றும் ஆர்வத் துடிப்புள்ள நுகர்வோர்களின் பொருளாதார வளர்ச்சி ஆண்டுதோறும் 7-9% அளவில் வளர்ந்து கொண்டிருப்பதால், சர்வதேச மற்றும் இந்திய சந்தையாளர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் வற்றுவதேயில்லை.

ஒட்டுமொத்தத்தில், இந்தியப் பொருள்கள் ஆண்டுதோறும் 20-25% வளர்ச்சியைச் சந்திக்கிறது. இதில் ஹோம் டெக்ஸ்டைல்ஸ், பிளைண்ட்ஸ், ஃபுளோர் கவரிங்க்ஸ் மற்றும் வால் பேப்பர்ஸ் விற்பனை 20% முதல் 30% அளவில்; ஹவுஸ்வேர் பொருள்கள் 15% முதல் 20% அளவில் மற்றும் கிஃப்ட்டுகள் 10% முதல் 15% அளவில் வளர்ந்திருக்கின்றன.

இந்த அளவில் மிகப் பெரிய அதே சமயம் பரவலாக பரந்திருக்கும் சந்தையில் நம்பகமான வளமிக்க பிசினெஸ் பார்ட்னர்களைச் சந்திக்க வைத்து நீடித்து பயனளிக்கும் உறவை ஏற்படுத்துவது என்பது இந்திய மற்றும் சர்வதேச பிராண்டுகளுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் ஒரு மிகப் பெரிய சவால் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஃபர்னிஷிங்க்ஸ், ஹோம் டெகோர், ஹவுஸ்வேர் மற்றும் கிஃப்ட்ஸ் பிரிவுகளில், HGH இந்தியா துல்லியமான பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் பிரசித்தி பெற்ற ரீடெய்லர்கள், இறக்குமதியாளர்கள், வினியோகஸ்தர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் ஏஜண்டுகளுடன் இக் கண்காட்சியின் எக்ஸிபிட்டர்களை தொடர்புகொள்ள வைக்கிறது.

ஜூலை 1-3 தேதிகளில் நடைபெறவிருக்கும் HGH இந்தியா 2016 கண்காட்சி குறித்த அதிக விபரங்களை www.hghindia.com இணையதளத்தில் பெறுங்கள்.










## HGH இந்தியா 2015 கண்காட்சி பெற்றுக்கொடுத்த சிறந்த ரிசல்டுகள்

பல ஹை பவர் பிராண்டுகள், புராடெக்ட்டுகள், டிரேட் ஸ்கீம் மற்றும் புத்தம் புது விளம்பரங்கள் HGH இந்தியா 2015 கண்காட்சியில் அறிமுகம் செய்யப்பட்டன. நூற்றுக்கணக்கான புதிய டிசைன்களும் புராடெக்டுகளும் புதுமுறை சிறப்பம்சங்கள் கொண்டதாக பல எக்ஸிபிட்டர்கள் இக் கண்காட்சி மூலமாக சந்தையில் கொண்டு வந்தனர். டிரைடெண்ட் குரூப் அறிமுகம் செய்தவை; பிரபல செஃப் சஞ்சீவ் கபூர் அறிமுகம் செய்தவை; டிசிடெக்ஸ் ஃபர்னிஷிங்க் வெளியிட்ட புதுவித பெட் லினன் வகைகள் கண்காட்சியை சிறப்புள்ளதாகச் செய்ததுடன் இன்னும் பல உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை வெளியிட்டு சென்ற வருட கண்காட்சியின் பரபரப்பையும் எழுச்சியையும் மூன்று நாட்களுக்கு உயிர்துடிப்புடன் வைத்து பார்வையாளர்களுக்கு விருந்தளித்தனர்.

28 நாடுகளிலிருந்து வந்திருந்த பொருள்கள் கண்காட்சியில் அழகாக டிஸ்பிளே செய்யப்பட்டிருந்தன. சர்வதேச பிராண்டுகளான ஜெர்மனியின் Zwiesel கிளாஸ்வேர், ஸ்டோரேஜ்-கிளீனிங் ரேஞ்ச் பொருள்களை உற்பத்தி செய்யும் ஸ்பானிஷ் பிராண்டு Juypal, இத்தாலிய குக்வேர் பிராண்டு Rossetti, இவைகளுடன் Harlequin, Casamance, Designers Guild, Zimmer + Nachtmann வழங்கிய புதிய ரேஞ்ச் மற்றும் பற்பல புதிய உன்னதங்கள் கண்காட்சியின் வளமையை அதிகரித்தன.

**சீனாவிலிருந்து 25க்கும் மேற்பட்ட புதிய எக்ஸிபிட்டர்கள்** முதன்முறையாக இக் கண்காட்சியில் பங்கேற்று தங்கள் உற்பத்திப் பொருள்களை இந்திய சந்தையில் அறிமுகம் செய்தனர்.

**இந்தியா, இத்தாலி, ஜெர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம், பிரான்ஸ், யூகே, செக் ரிபப்ளிக், யூஎஸ்ஏ, கனடா, ஆஸ்திரேலியா, சைனா, தைவான், கொரியா, தாய்லந்து, ரஷ்யா, ஜோர்டான், டர்கி, ஹாங்காங், யூஏஇ மற்றும் பல நாடுகளிலிருந்து** ஹோம் புராடெக்டுகள் பிரிவிலும் மற்றும் புதிய துணை பிரிவுகளில், வழக்கமான மற்றும் புதிய எக்ஸிபிட்டர்கள் தங்கள் புத்தம் புதிய பொருள்களையும், டிசைன் புதுமைகளையும் இக் கண்காட்சியில் அறிமுகம் செய்தனர்.



## ஹோம் டெக்ஸ்டைல்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா

HGH இந்தியா 2015 கண்காட்சிக்கு, ஹோம் டெக்ஸ்டைல் மற்றும் ஃபர்னிஷிங் ரீடெய்லர்ஸ் பலரும் உறுப்பினர்களாக இருக்கும் ஹோம் டெக்ஸ்டைல்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா முழு ஆதரவு வழங்கியது. அசோசியேஷனின் ஜெனரல் பாடி மீட் இக் கண்காட்சி நடத்திக் கொடுத்தது.

**ஜெகதிஷ் கண்டெல்வால், தலைவர், ஹோம் டெக்ஸ்டைல்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா,** ''உறுப்பினர்களில் பொது நன்மைகளை மேம்படுத்தும் விதமாக HTA உறுப்பினர்கள் மேற்கொள்ளும் அனைத்து ஸ்கீம்கள் மற்றும் புரொக்ராம்களுக்கு, ''மேட் இன் இந்தியா'' கொள்கையை வலியுறுத்தும் விதமாக அனைத்து முயற்சிகளையும் HTA வரவேற்று ஊக்குவிக்கும்; நம் நாட்டு தயாரிப்புகளை மிகச் சிறந்த சர்வதேச பொருள்களுடன் ஒன்றாக வைத்து உள்நாட்டு நுகர்வோர்களுக்கு தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அளிப்பது மிகவும் விரும்பத்தக்க ஒன்று. மிகப் பெரிய தொலைநோக்குடன் இது போன்ற பெரிய தளம் ஒன்றை அமைத்துக் கொடுத்து இந்தியா மற்றும் சர்வதேச நுகர்வோர்கள் தங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை ஒரு கூரையின் கீழ் தொழில்முறை சூழலில் வர்த்தகத்தைச் செய்ய உதவியிருக்கும் HGH இந்தியாவுக்கு கட்டாயம் பாராட்டு தெரிவிக்க வேண்டும்.'' என்று கூறுகிறார்.






# ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஹோம் டெகோர், ஹவுஸ்வேர் மற்றும் கிஃப்ட்ஸ் குறித்த கண்ணோட்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்

## வருகையாளர்கள் அனுபவங்கள்



**விக்ரம் சிட்னிஸ்,**

*ஹோம் ஸ்டாப், மும்பை*

இந்த வருட HGH இந்தியா கண்காட்சியில் பல பொருள்கள் இருக்கும் என்பதால் புராடெக்ட் பிரிவுகளைப் பொருத்த வரையில் இது புதிய முறையில் விரிவானதாக இருக்கும். ஒளி அமைப்பு மற்றும் சேவை தரங்களும் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும், முதல் நாள் முதல் காட்சி உற்சாகமளிக்கிறது.



**கிரித்தி சனோன்,**

*பிராண்டு அம்பாசிடர் - டிரைடெண்ட் குரூப்*

இங்கு வந்தது எனக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது. இங்கே வந்திருப்பவர்கள், இங்கிருப்பவர்களுக்குக் கிடைக்கும் சுதந்திரம் எல்லாமே உங்களை ஒரு புதிய அனுபவத்திற்கு அழைத்துச் செல்கிறது. வழியில் நடந்து செல்லும்போது பலரையும் பார்க்க முடிகிறது, பல புதிய பொருள்கள் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. இங்கே எனக்கு புது அனுபவம் கிடைக்கிறது, இதுபோன்ற நிகழ்வுகளில், பிராண்டு அறிமுகங்களில் இந்த அனுபவம் கிடைப்பது அரிது, என்னைப் பொருத்த வரையில் இது தான் சரியான அறிமுக ஏற்பாடு என்று சொல்வேன். ஏனென்றால், இங்கே தான் சந்தை நிலவரத்தைக் காண முடிகிறது, இங்கே தான் இந்த பிராண்டுகளை விரும்புபவர்களைக் காண முடிகிறது, இது போன்ற ஹோம் டெகோர் பொருள்களை ஒருசேர இங்கே தான் பார்க்க முடிகிறது.



**திலீப் காந்தி,**


*இயக்குனர் - பாரத் ஃபர்னிஷிங்*

சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருட பூத்துகள் அதை அமைத்திருப்பவர்கள், அளவு மற்றும் டெகோரேஷனில் பெரிய வித்தியாசத்தைப் பார்க்க முடிந்தது. HGH இந்தியா கண்காட்சியில் நாங்கள் இதுவரை சந்தித்திருக்காத பல புதிய உற்பத்தியாளர்களைச் சந்திக்க முடிந்தது. இனி இந்த கண்காட்சியில் நாங்கள் பல புதிய உற்பத்தியாளர்களை ஒவ்வொரு வருடமும் சந்திக்கும் வாய்ப்புகள் கிடைக்கும். அனைத்து உற்பத்தியாளர்களின் புதிய பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதை நாங்கள் பார்த்து ஆர்டர் செய்யவும் முடிகிறது. ஒரே இடத்தில் பல உற்பத்தியாளர்களைச் சந்திக்க முடிவது எங்களுக்கு பெரிய இலாபமாக உள்ளது.

**பானு உபாத்யாய்,**

*வால்மார்ட் இந்தியா, தில்லி என்சிஆர்*

எந்தெந்த பொருள்களை கொள்முதல் செய்து விற்க எண்ணிக் கொண்டிருந்தோமோ அந்த பொருள்களில் பெரும்பாலானவை HGH இந்தியா கண்காட்சியில் கிடைக்கின்றன. எதிர்காலத்தில் இன்னும் மிகப் பெரிய அளவில் நாங்கள் இதனுடன் சம்பந்தப்பட்டிருப்போம் என்று நான் நிச்சயமாகக் கூற முடியும்.



**ஹீரு தாக்குர்தாஸ்,**

*சிஇஓ & ஹோம் - ஃபுட்வேர், ஃப்யூச்சர் குரூப்*

நான்கு ஆண்டுகளாக நான் HGH இந்தியாவிற்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு வருடமும் இதன் வளர்ச்சியும், பிரிவுகளில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களும், புராடெக்டுகளும் அளவும் வளர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. புதிய விற்பனையாளர்கள், புதிய எக்ஸிபிட்டர்கள், புதிய பிரிவுகள் என்று இந்த முறை நான் ஃப்ளோரிங்க்ஸ், கிச்சன், ஹவுஸ்வேர், பெட்டிங்ஸ் என்று பல புதிய விற்பனையாளர்களைப் பார்க்க முடிந்தது. சென்ற வருடத்தை விட, இவை ஒழுங்குமுறையுடன் வகைப்படுத்தப் பட்டிருந்தன.



**ஹன்ஸ் உதேஷி,**

*மேக்ஸ் ஹைபர்மார்கெட் இந்தியா, பெங்களூரு*

HGH இந்தியா கண்காட்சிக்கு இதற்கு முன்னரும் போயிருக்கிறேன். இங்கே பார்க்கக் கிடைக்கும் பிரிவுகள், சர்வதேச அளவில் உள்ளன. ஒவ்வொரு வருடமும் இக் கண்காட்சி பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது சந்தோசமாக இருக்கிறது. பல ரேஞ்ச் புராடெக்டுகளை ஒரே இடத்தில் நாங்கள் பார்த்து வாங்க முடிவது எங்களுக்கு பெரிய வசதியாக உள்ளது.

## எக்ஸிபிட்டர்கள் அனுபவம்



**ஜெங் டி, சிஜசிஇடிஇ,**

*வர்த்தக அமைச்சகம், சீனா*

நாங்கள் பங்கேற்ற பல யூஎஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கண்காட்சிகளை விட இக் கண்காட்சி மிகச் சிறப்பாக தொழில்முறை திறமையுடன் நடத்தப்படுகிறது. முதல் நாள் அன்றே எங்கள் நாட்டு எக்ஸிபிட்டர்கள் இடங்களில் பல விசிட்டர்கள் வந்திருந்ததைப் பார்க்க முடிந்தது. முதல் முறையாக நாங்கள் இந்தியாவில் எங்கள் பொருள்களை அறிமுகம் செய்திருக்கிறோம் என்றாலும், நாங்கள் எதிர்பார்த்ததைவிட மிக அதிக வரவேற்பு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

**விச்செய் பூசிட்ரானுசோர்ன்,**

*மேனேஜிங் டைரக்டர் - DKW, தாய்லாந்து*

HGH இந்தியாவிலிருந்து எங்களுக்குக் கிடைக்கும் பின்னூட்டக் கருத்துகள் ஒவ்வொரு முறையும் சிறப்படைந்து கொண்டிருக்கிறது. இந்திய சந்தைகளில் எங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் வாய்ப்புகளும் வரவேற்பும் உற்சாகமளிக்கின்றன என்பதால் மேன்மேலும் இக் கண்காட்சியில் பங்கேற்க இருக்கிறோம். இந்த வருடம், இக் கண்காட்சி சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கிறது, பெரியதாகவும் உள்ளது. நிறைய வாடிக்கையாளர்களைக் காண முடிந்தது.

**ஜுவான் ஜோஸ் வேலர்**

*JuypalHogar SL, ஸ்பெய்ன்*

''இது ஒரு நல்ல கண்காட்சி, இந்தியாவில் முதன்முறையாக நாங்கள் பங்கேற்றிருக்கிறோம். பல வாடிக்கையாளர்கள் எங்கள் பொருள்களில் ஆர்வம் காட்டினார்கள். இந்த கண்காட்சியைத் தொடர்ந்து இன்னும் நிறைய கோரிக்கைகள் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.''

**டெய்சுகே கிடோகொரோ,**

*சேல்ஸ் மேனேஜர் - டோசோ, ஜப்பான்*

HGH இந்தியா கண்காட்சியில் எங்கள் புராடெக்டுகளில் ஆர்வம் காட்டிய நிறைய இந்திய வாடிக்கையாளர்களை நாங்கள் சந்தித்தோம். எங்கள் பிராண்டுகளை விரிவு படுத்தி இந்திய சந்தையில் எங்கள் வர்த்தக வாய்ப்புகளைப் பெருக்க இது ஒரு நல்ல ஆரம்பம் என்று நான் கருதுகிறேன்.



**அனிஷ் தோஷி,**

*டெக்ஸ்டிரேட் இன்டர்நேஷனல் லிமிடெட்*

''இதற்கு முன்னர், நாங்கள் ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்தோம். சென்ற வருடம் HGH இந்தியா கண்காட்சிக்கு வந்து பார்த்த பிறகு, இந்திய சந்தையிலும் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதனால் தான் இந்த கண்காட்சியில் பங்கேற்று எங்கள் புராடெக்டுகளை அறிமுகம் செய்ய விரும்பினோம், நல்ல ரெஸ்பான்ஸ் கிடைத்தது.''

எங்களுக்கு முதலில் கிடைத்த அனுபவத்திலிருந்து இந்த வருட கண்காட்சியில் மேலும் பல புதுமையான புராடெக்டுகளை, உலக தரத்திலும் ரேஞ்சிலும் வழங்கி இந்திய ரீடெய்லர்களை ஆச்சரியப்படுத்த இருக்கிறோம்.



**நிமிஷ் அரோரா,**

*நிர்வாக இயக்குனர்,*

*டிசிடெக்ஸ் ஃபர்னிஷிங்ஸ் லிமிடெட்*

நாட்டின் பல இடங்களில் எங்கள் வியாபாரத்தைப் பெருக்க HGH இந்தியா உதவியுள்ளது. வரும் ஆண்டின் HGH இந்தியா கண்காட்சியில், பல அழகான இத்தாலியன் வால் பேப்பர் ரேஞ்ச், ஃபாயில் பிரிண்டெட் ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்ஸ் போன்ற பல புதுமைப் பொருள்களையும் எங்கள் புராடெக்டுகளையும் நாங்கள் அறிமுகம் செய்யவிருக்கிறோம். எங்கள் பெட் லினன் கலெக்ஷன்களில் பல புதுமைப் படைப்புகள் கிடைக்கும் என்றும் எங்கள் டீலர்கள் எதிர்பார்க்கலாம்.



**ரஜ்னீஷ் பாட்டியா,**

பிசினெஸ் ஹெட் (டொமெஸ்டிக்)

டிரைடெண்ட் குரூப்

''டெர்ரி டவல்ஸ் துறையில் டிரைடெண்ட் உலகளவில் முன்னணி நிறுவனமாக உள்ளது. சென்ற வருடம் இந்திய சந்தையிலும் அனைத்து பிரிவினரும் பயன்படுத்த ஏற்ற எங்கள் முழு ரேஞ்ச் ஹோம் டெக்ஸ்டைல்ஸ்களை அறிமுகம் செய்ய விரும்பினோம். இந்த வகையில், HGH இந்தியா அமைத்துக்கொடுத்த தளத்தை விட மிகச் சிறந்த ஒன்றை நாங்கள் எதிர்பார்த்திருக்க முடியாது என்றே தோன்றுகிறது.''

அடுத்த வருடம் நாங்கள் இன்னும் புதிய புராடெக்டுகளை, ரீடெய்லர்கள் அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு மேலும் பல வகைப்பட்டவைகளை வழங்கும் விதத்தில், அறிமுகம் செய்ய இருக்கிறோம்.



**சஞ்சீவ் கபூர்,**

*நிர்வாக இயக்குனர்,*

*கானாகஜானா பிரைவேட் லிமிடெட்*

மிகக் குறுகிய காலத்தில் உலகத்தர அளவில் சர்வதேச அமைப்பாக HGH இந்தியா கண்காட்சிகளை அமைத்துக் கொடுக்கிறது, சுற்றுச்சூழலும், தள அமைப்பும் இத் துறை பொருள்களுக்கு மிகவும் உதவுகிறது என்பதை மிக மகிழ்வுடன் நான் கூற முடியும். வெளிநாடுகளில் இதுபோன்ற கண்காட்சிகளைப் பார்க்கும் போது HGH இந்தியா வழங்கும் வசதிகளின் தரம் மற்றும் அரங்கு அமைப்புகளின் சீர்மை உங்களை ஆச்சரியப் படுத்தும். சஞ்சீவ் கபூர் பிராண்டு மட்டுமல்ல, டிவி சேனல்களில் ஒளிபரப்பாகும் ஒண்டர்செஃப் மற்றும் ஃபுட்ஃபுட் ஆகியவையும் HGH இந்தியாவுடன் இணைந்து செயல்படுகின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த தொடர்பு வரும் ஆண்டுகளிலும் வளரும் என்பது எனக்கு நிறைவாக உள்ளது.




**தீபாலி கோயன்கா,**

*நிர்வாக இயக்குனர், வெல்ஸ்பன் ரீடெய்ல்*

HGH இந்தியா 2016 கண்காட்சியில் நாங்கள் பெரிய அளவில் எங்கள் புதிய ரேஞ்ச் புராடெக்டுகளை அறிமுகம் செய்ய ஆவலுடன் காத்திருக்கிறோம். எங்கள் புதிய ரேஞ்ச் புராடெக்டுகள் ரீடெய்லர்களை வெகுவாக ஆர்வப்பட வைக்கும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது.


HGH இந்தியா கண்காட்சியில் வருகை புரிபவர்கள் எண்ணிக்கை 50% அளவு வரை அதிகரித்திருக்கிறது என்பதை நான் பார்க்க முடிகிறது. நம் நாட்டின் ஜிடிபி 7.5 முதல் 8% வரை மேம்பட்டிருப்பதால், இந்திய சந்தையும் வெகு வேகமாக வளர முடியும். ஸ்பேசஸ், வெல்ஸ்பன் பிராண்டுகளுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் வரவேற்பு ஆச்சரியமூட்டும் அளவில் பெருகிக் கொண்டிருக்கிறது. சென்ற வருடம் எங்கள் வர்த்தகம் 35% வரை பெருகியதைத் தொடர்ந்து இந்த வருடம் 65% வரை பெருகும் என்று நம்பிக்கை பிறக்கிறது. இவ்வாறு இந்திய சந்தை பெருகுவதற்கு HGH இந்தியா கண்காட்சியும் சிறப்பாகப் பங்களித்துக் கொண்டிருக்கிறது.



**விஜய் அகர்வால்,**

*சேர்மென், கிரியேடிவ் போர்டிகோ*

HGH இந்தியாவைக் குறித்து சொல்லவேண்டும் என்றால், இது மிகவும் தேவையான ஒன்று. இங்கே நான் பார்க்கக் கிடைப்பவை எனக்கு பெரிய திருப்தி அளிக்கின்றன. ஹோம் ஃபேஷன் என்றால் என்ன, உங்கள் வீட்டை நீங்கள் எவ்வாறெல்லாம் அழகுபடுத்த முடியும் என்பதை மக்கள் உணர வேண்டும் என்று நினைக்கிறேன். நீங்கள் அணியும் ஆடைகளைப் போலவே உங்கள் வீடும் அழகாக இருப்பது முக்கியம். இதில் HGH இந்தியா பங்கு சிறப்பானது. எதிர்காலத்திலும் நாங்கள் இங்கே வர இருக்கிறோம். இந்த கண்காட்சி இன்னும் பெரிய அளவில் வளரும் என்று எதிர்பார்க்கிறேன்.





**குல்தீப் வட்டல்**

*சேர்மேன் - சிஇபிசி*

வரும் ஆண்டுகளில், ஹோம் டெக்ஸ்டைல் மற்றும் கார்பெட் துறையைப் பொருத்த வரையில், இந்த கண்காட்சி இந்தியாவில் மிகப் பெரிய கண்காட்சியாக வளரும். கார்பெட் எக்ஸ்போர்ட் புரமோஷன் செக்டரைப் பொருத்த வரையில் நான் இந்த கண்காட்சிக்கு முதன்முறையாக வந்திருக்கிறேன் என்றாலும், எங்கள் உறுப்பினர்கள் வருடந்தோறும் இங்கு வந்து கொண்டிருக்கும் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து இக் கண்காட்சியில் பங்கேற்க அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர்.

**ஜூலை 1-3, 2016 பாம்பே எக்ஸிபிஷன் சென்டர், கொரெகாம் (கிழக்கு), மும்பை.**














# Visitor
## Registration Form

HGH INDIA 2016 — Homedécor Gifts Houseware — Redefining Sourcing

☐ Mr. ☐ Ms. ☐ Mrs.

Name ______________________________

Designation ______________________________

Company ______________________________

Address ______________________________

City ____________ Pin Code ____________ State ____________

Telephone (Off.) ____________ Fax ____________

Mob 1 ____________ Mob 2 ____________

Email 1 ____________ Email 2 ____________

Website ______________________________

**A. Type(s) of your Business (Please tick ☑)**

**Retailer**
☐ Department Store ☐ Traditional Store
☐ Mail Order House ☐ Boutique
☐ Hyper Market ☐ Cash and Carry
☐ Discount Store ☐ Other ________
☐ Speciality Stores(MBOs) ________
☐ Speciality Stores(EBOs) ________

**Trade Representative**
☐ Sales Agent
☐ Brand Representative
☐ Distributor
☐ Importer
☐ Wholesaler

**Buyers**
☐ Interior Designer
☐ Corporate Gifts
☐ Gift Suppliers
☐ Buying Houses

**E-Commerce**
☐ Online Retailers ☐ Other ________
☐ TV Shopping ________
☐ Mail Order

**Industry**
☐ Manufacturer
☐ Brand Owner
☐ Exporter

**Others**
☐ Service Provider
☐ Trade Association
☐ Government

**B. Products of your interest**

**Home Décor**
☐ Ceiling ☐ Floor
☐ Wall ☐ Decorative Accessories
☐ Windows ☐ Lifestyle

**Home Textiles**
☐ Sleeping ☐ Living
☐ Bath ☐ Furnishing
☐ Table & Kitchen

**Gifts**
☐ Corporate
☐ Personal
☐ Festive

**Houseware**
☐ Cookware ☐ Maintenance
☐ Kitchen Appliances ☐ Cleaning
☐ Tableware ☐ Storage
☐ Bathroom ☐ Outdoor

**Services**
☐ Trade Publication ☐ Visual Merchandising
☐ Institutional ☐ IT Solutions
☐ Retail Management ☐ Other Support Services(Specify)
☐ Logistic ________

**C. Purpose of your visit**
☐ Source International Products ☐ Source Indian Products ☐ Find New Suppliers
☐ Meet Current Suppliers ☐ Find Agent / Distributor ☐ New Business Opportunities
☐ Product Innovations/Trends ☐ Market Information
☐ Other (Please Specify) ________

**D. How did you learn about this Trade Show?**
☐ Internet ☐ Email ☐ Website ☐ Direct Mailer ☐ Newspaper
☐ Hoardings ☐ Advertisements ☐ From Exhibitor ☐ From Organiser ☐ Word of Mouth
☐ Other(Please Specify) ________

**E. Have you visited any previous edition of HGH India?**
☐ HGH India 2013 ☐ HGH India 2014 ☐ HGH India 2015 ☐ All Editions ☐ None

***Important notes:***
*1) Incomplete form in any respect will not be accepted. It is mandatory to fill the column Invited by.*
*2) HGH India is strictly a Trade Show. Therefore entry to consumers is not allowed. No retail purchase permitted. You can be disqualified if found doing retail purchases. 3) Children below 15 years are not allowed*

Duly filled form to be sent by Fax: +91-22-2421 4116 or Email: visitors@hghindia.com or by post latest by 10th June, 2016 to the address mentioned below. You can also register online at www.hghindia.com>visitors>visitor registration

**அமைப்பாளர்கள்: டெக்ஸ்ஜோன் இன்ஃபர்மேஷன் சர்வீசெஸ் பிரைவேட் லிமிடெட்**
431, கலியந்தாஸ் உத்யோக் பவன், செஞ்சுரி பவன் அருகில், பிரபாதேவி, மும்பை - 400025.
தொலைபேசி: +91(22) 2421 4111 ஃபேக்ஸ்: +91 (22) 2421 4116 இமெயில்: exhibitors@hghindia.com
**தில்லி அலுவலகம்:** யூனிட் நெ.1003, விக்ராந்த் டவர், ராஜேந்திர பிளேஸ், புது தில்லி - 100 008.
தொலைபேசி: +91(11) 2571 4111 ஃபேக்ஸ்: +91 (11) 25714116 இமெயில்: exhibitors@hghindia.com

**எக்ஸிபிட்டர் தொடர்பு**
**இந்தியா:** முகேஷ் அகர்வால், அலுவலகம்: +91(22) 2421 4111 மொபைல்: +91 9821310453
இமெயில்: mukesh.agarwal@hghindia.com
**ஐரோப்பா:** பியா ரைசென், எக்ஸ்போ+ கன்சல்டிங் அசோசியேட்ஸ், ஆம்ஸ்டர்டாமெர்ஸ்டர்.44,
டிஇ-40474 டுஸ்செல்டார்ஃப், ஜெர்மனி.
தொலைபேசி: +49 2 116549453 பேக்ஸ்: + 49 2 116549456 இமெயில்: pia.ryhsen@expoandconsulting.com

**விசிட்டர் கான்டாக்ட் இந்தியா**
திரு. அமர் ஷர்மா மொபைல்: +91 9967600286 அலுவலகம்: +91(22)2421 4111 இமெயில்: visitors@hghindia.com
திருமதி. வித்யா வர்தமான் மொபைல்: +91 99 676 00576 அலுவலகம்: +91(22)2421 4111
இமெயில்: visitors@hghindia.com